**Tamil Chudar, Chennai, November 27, 2009**

# பள்ளி மாணவர்களுக்கான வினாடி-வினா போட்டி

## 500 பேர் கலந்து கொண்டனர்

சென்னை,நவ.27- பள்ளி மாணவ-மாணவிகளுக்கான வினாடி-வினா போட்டி சென்னையில் நடைபெற்றது. டாட்டா கன்செல்டன்சி சர்வீஸ் சார்பில் நடைபெற்ற இந்த போட்டியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

8 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவர்கள் மட்டும் இந்த போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.மாணவர்களின் அறிவுத்திறமையை சோதிக்கும் வகையில் பல்வேறு பிரிவுகளில் இருந்தும் கேள்விகள் கேட்கப்பட்டன.

இறுதியாக புள்ளிகள் அடிப்படையில் சிறந்த அணிகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. வெற்றிப்பெற்ற பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வாகுல் மற்றும் ரவி விஸ்வநாதன் ஆகியோர் பரிசுகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.